Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | |
|---|---|---|---|
| Calendar .. .. | } | | |
| Miscellaneous .. .. | } | | |
| Preliminary Register .. .. | } | **S.C. 156/2022** | |
| Sessions .. .. | } | | |
| | } | Prosecution | – **PW3** |
| Deposition of witness for | } | Defence | – |
| | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | உதயசங்கர் |
| Father/Husband Name | : | ஜெயச்சந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023

(எதிரி 1 ஆஜர்)

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் தங்கப்பா நகரில் வசித்து வருகிறேன். நான் ஏசி மெக்கானிக் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் காயம்பட்ட ராஜாத்தி எனது அம்மா ஆவார். சம்பவ சமயத்தில் எனது வீட்டில் என் அம்மா குடியிருந்து வந்தார். சாட்சி ராஜ்கமல் எனது உடன் பிறந்த தம்பி ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 24.04.2021ம் தேதி நான் எனது கடையில் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது மதியம் 01.50 மணியளவில் எனது தம்பி ராஜ்கமல் செல்போன் மூலம் எனது அம்மா ராஜாத்தி அடிபட்டு இரத்தவெள்ளத்தில் கிடந்ததாகவும் அவரை சிகிச்சைக்காக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்துள்ளதாக தகவல் சொன்னார். நான் உடனே கிளம்பு இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன்.

அப்போது என் அம்மா தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் சிகிச்சையில் இருந்தார். எனது அம்மா சுயநினைவு இல்லாமல் இருந்ததால் மறுநாள் 25.04.2021ம் தேதி இராமநாதபுரம் ஜோசப் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அதன் பிறகு மேல்சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். எனது அம்மா காயம்பட்டது குறித்து எனது தம்பி ராஜ்கமல் என்பவர் பஜார் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அந்த புகாரில் அறிவேன் சாட்சியாக நான் கையெழுத்து போட்டேன். புகாரில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து அ.சா.ஆ.3. அதன் பிறகு 26.04.2021ம் தேதி மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் எனது அம்மா சிகிச்சையில் இருந்தபோது எனது அம்மாவிடம் நடந்த விவரம் கேட்டேன். அப்போது எனது அம்மா பக்கத்து வீட்டில் வசிக்கும் ஆஜர் எதிரி ராவூத் இப்ராகிம் என்பவர் சுத்தியலால் தாக்கி என் அம்மா அணிந்திருந்த 5 பவுன் செயினை பறித்துச் சென்றதாக சொன்னார். போலிசார் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு விசயமாக போலிசார் என்னை 24.04.2021ம் தேதி மதியம் 02.30 மணிக்கு எனது வீட்டில் வைத்து விசாரித்தார்கள். அப்போது என் தம்பி ராஜ்கமல் கூட இல்லை. போலிசார் வந்து இடத்தை பார்த்தார்கள். ஆனால் அவர்கள் என்ன செய்தார்கள் என்று தெரியவில்லை. போட்டோ எடுத்தார்களா அல்லது இரத்தம்பட்ட மண்ணை எடுத்தார்களா அல்லது துப்பறியும் நாய் வந்ததா அல்லது தடய அறிவியல் துறை அலுவலர்கள் வந்தார்களா என்று எனக்கு தெரியாது. எங்கள் வீட்டின் கதவில் கொக்கி போட்டிருக்கும்போது அந்த கொக்கியை எடுத்தால் தான் கதவை திறக்க முடியும். எங்கள் வீட்டில் உள்ள முன்கதவு இருபக்கமும் திறக்கக்கூடிய இரும்புக்கதவு ஆகும். எனக்கு திருமணமாகி நான் தனியாக இருக்கிறேன் என்றால் சரியல்ல. நானும் என் மனைவி, குழந்தைகளும் என் அம்மா மற்றும் தம்பியின் குடும்பத்தோடு ஒன்றாகத்தான் இருக்கிறோம். என் மனைவி வேலை எதுவும் பார்க்கவில்லை. போலிசார் என்னை மதியம் 02.30 மணிக்கு விசாரிக்கும்போது போலிசார் எழுதிக்கொள்ளவில்லை. அதற்கு பின்னர் அன்றைய தினமே போலிசார் என்னை மீண்டும் காவல் நிலையத்திற்கு அழைத்துச்சென்று என்னிடம் கைரேகை வாங்கினார்கள். அதற்கு பின்னர் போலிசார் என்னை கூப்பிட்டு விசாரிக்கவில்லை. இராமநாதபுரம் ஜோசப் மருத்துவமனைக்கும், மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கும்

நான் என் அம்மா கூட சென்றேன். மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் வைத்து என் அம்மாவை மருத்துவர்கள் விசாரித்தார்களா என்றால் அது எனக்கு தெரியாது. நான் தற்போது பாரதீய ஜனதா கட்சியில் உறுப்பினராக இருக்கிறேன். 3 வருடமாக அந்த கட்சியில் இருக்கிறேன். சம்பவம் நடந்த பிறகு இந்து மதத்தை சார்ந்தவர்களும், முஸ்லீம் மதத்தை சார்ந்தவர்களுக்கும் இடையே பிரச்சனை ஏற்பட்டு பஸ் மறியல் மற்றும் போராட்டம் நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. எந்த போராட்டமும் நடத்தவில்லை. எங்கள் தெருவில் போலிஸ் பாதுகாப்பு இருந்தது என்றால் இல்லை. எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் இடையே 25 வருடமாக பேச்சுவார்த்தை மற்றும் பழக்கம் இருந்தது. எதிரி எங்கள் வீட்டிற்கு வந்து செல்லும்போது என் அப்பா நோய்வாய்பட்டு இருக்கும்போது வரவேண்டாம் என்று எதிரியை நாங்கள் தடுத்தோம் என்றால் சரியல்ல. அவரை நாங்கள் கண்டித்தும் அவர் தொடர்ந்து எங்கள் வீட்டிற்கு வந்து கொண்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் பாரதீய ஜனதா கட்சியில் இருந்தேன் என்றும் அந்த கட்சியின் செல்வாக்கை வைத்து எதிரியை கண்டித்தேன் என்றும் அதையும் மீறி எதிரி எங்கள் வீட்டிற்கு வந்த காரணத்தால் எனது கட்சியின் செல்வாக்கை பயன்படுத்தி இப்படியொரு வழக்கை பின்னிட்டு தயார் செய்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. அதற்கு ஏற்ப செயினையும் சுத்தியலையும் நாங்களே தயார் செய்து கொடுத்து காவல் துறை துணையோடு இந்த வழக்கை புனைந்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல. என் மீது எதிரியின் வாகனத்தை உடைத்ததாக ஒரு வழக்கு இருக்கிறது என்றும் அதையும் சரிசெய்ய வேண்டும் என்பதற்காக இப்படியொரு வழக்கை புனைந்து என் தாயாரை கட்டாயப்படுத்தி சாட்சியம் சொல்ல வைத்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 156/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW2** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | இராஜாத்தி |
| Husband Name | : | ஜெயச்சந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023

(எதிரி 1 ஆஜர்)

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் தங்கப்பா நகரில் வசித்து வருகிறேன். அ.சா.1 ராஜ்கமல் எனது மகன் ஆவார். சாட்சி உதயசங்கர் எனது மற்றொரு மகன் ஆவார். எனது கணவர் சம்பவத்திற்கு 8 மாதத்திற்கு முன்பு இறந்துவிட்டார். நான் எனது மகன்களுடன் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 24.04.2021ம் தேதி மதியம் 01.30 மணியளவில் நான் எனது வீட்டில் டிவி பார்த்துக்கொண்டிருந்தபோது எனது வீட்டின் கேட் திறந்து ஆஜர் எதிரி வீட்டிற்குள் வந்தார். என்ன அண்ணே என்று கேட்டேன். அப்போது ஆஜர் எதிரி கோழி வந்ததாகவும் அதை பார்க்க வந்ததாகவும் சொன்னார். அதன் பிறகு என்னிடம் குடிக்க தண்ணீர் கேட்டார். தண்ணீர் கேட்டு கொஞ்ச நேரத்தில் எதிரி சுத்தியலால் எனது

தலையின் பின்புறம் அடித்தார். அடித்து கொஞ்ச நேரத்தில் நான் வெளியேவர முயற்சித்தபோது எதிரி மீண்டும் சுத்தியால் தலையில் அடித்த உடன் நான் கீழே விழுந்துவிட்டேன். பின்பு எதிரி மீண்டும் எனது தலையை சுவற்றில் முட்ட வைத்தார். பின்பு எதிரி நான் அணிந்திருந்த 5 பவுன் செயினை தலையிலிருந்து கழற்றி எடுத்துச் சென்றுவிட்டார். நான் மயங்கி விழுந்துவிட்டேன். பின்பு என்ன நடந்தது என்று தெரியாது. பின்பு எனது மகன் ராஜ்கமலிடம் விசாரித்தபோது இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் சேர்த்து பின்பு மேல்சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது பஜார் ஆய்வாளர் என்னை விசாரித்தார். அப்போது நான் நடந்த விஷயத்தை நான் போலிசாரிடம் சொன்னேன். எதிரி என்னை தாக்கிய சுத்தியல் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஆயுதம் தான். அது சா.பொ.1. எதிரி என்னிடம் பறித்துச் சென்ற 5 பவுன் செயினை நான் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்து பெற்றுக்கொண்டேன். அந்த 5 பவுன் செயினை இன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துகிறேன். அந்த செயின் சா.பொ.2. செயினை காட்டக்கூடிய புகைப்படங்கள் மற்றும் சிடி (2 எண்ணம்) அ.சா.ஆ.2. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் வேலம்மாள் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அப்போது என் உடன் அ.சா.1 ராஜ்கமல் இருந்தார் என்றும் அவரையும் போலிசார் விசாரித்தார்கள் என்றும் சொன்னால் சரிதான். போலிசார் அதை எழுதிக்கொண்டார்கள். அ.சா.1 என் மகன் சொன்னதையும் எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். ஆஜர் எதிரி என் வீட்டிற்கு பக்கத்து வீடு என்பதால் என் வீட்டிற்கு எதிரி சாதாரணமாக வந்து செல்வார் என்றால் சரிதான். எதிரியின் மனைவியும் என் வீட்டிற்கு வந்து செல்வார். எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் 25 வருட பழக்கம் உள்ளது. எதிரியின் குடும்பம் வசதியான குடும்பம் என்றால் சரிதான். எதிரி தன் மகளை இராமநாதபுரத்தில் உள்ள சென்னை மொபைல்ஸ் உரிமையாளருக்கு திருமணம் செய்து வைத்து நல்ல வசதி வாய்ப்புடன் இருந்து வருகிறார் என்றால் சரிதான். எதிரியின் வீடு காம்பவுண்ட் சுவருடன் கூடிய வீடு என்றால் சரிதான். எதிரியின் மகன் துபாயில் இருக்கிறார் என்றால் சரிதான். எங்களுடைய வீட்டிற்கு கிழக்குப்பக்கம் காம்பவுண்ட் உள்ளது. நான் வீட்டில்

தனியாக இருப்பதால் நான் வீட்டின் கதவை பூட்டிவைத்திருப்பேன் என்றால் சரியல்ல. கேட் மற்றும் முன்வாசல் கதவு திறந்து தான் இருக்கும். எங்கள் வீட்டிற்கு வடக்குப்பக்கம் வீடு உள்ளது. தெற்குப்பக்கம் வீடு இல்லை. அந்த இடத்தில் மீன் வண்டிகள் நிறைய நிற்கும். போலிசார் என்னை விசாரிக்கும்போது எதிரி சுத்தியலால் எனது பின்தலையில் அடித்தார் என்றும் அடித்த உடன் நான் வெளியே வர முயற்சித்த போது மீண்டும் சுத்தியலால் தலையில் அடித்த உடன் நான் கீழே விழுந்துவிட்டேன் என்றும் மீண்டும் என்னை சுவற்றில் முட்ட வைத்தார் என்றும் பின்பு எதிரி என் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் செயினை கழற்றி எடுத்துச்சென்றுவிட்டார் என்று சொல்லியுள்ளேன். இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்று ஞாபகமில்லை. இராமநாதபுரம் ஜோசப் மருத்துவமனையில் எவ்வளவு நேரம் இருந்தேன் என்று ஞாபகமில்லை. எனக்கு 26.08.2021ம் தேதி காலை 08.00 மணிக்குத்தான் எனக்கு நினைவு திரும்பியது. எனக்கு ஏற்பட்ட சம்பவத்தைப்பற்றி நான் முதலில் என் மகன் ராஜ்கமலிடம் சொன்னேன். மூத்த மகன் உதயசங்கரிடம் எனக்கு நடந்த சம்பவத்தை பற்றி அந்த சமயத்தில் நான் சொல்லவில்லை. என் மகன் ராஜ்கமல் தான் என் மற்றொரு உதயசங்கரிடம் சொன்னார். நான் வேலம்மாள் மருத்துவமனையில் 4 நாட்கள் சிகிச்சையில் இருந்தேன். அதன் பிறகு நான் பார்த்திபனூரில் எனது அம்மா வீட்டில் 1 மாதம் இருந்தேன். எங்கள் குடும்பத்திற்கும் எதிரி குடும்பத்திற்கும் இடையே பிரச்சனை ஏற்பட்ட பிறகு அரசியல் கட்சியை சேர்ந்தவர்கள் வந்தார்கள் என்றால் சரியல்ல. எங்களுடைய சம்பவம் தொடர்பாக இரண்டு மதங்களுக்கு இடையே பிரச்சனையாக்கி பஸ்மறியல் மற்றும் போராட்டம் நடத்தப்பட்டது என்றால் சரியல்ல. நான் கணவர் உடல்நிலை சரியில்லாமல் இரண்டு வருடங்கள் இருந்தார். என் கணவர் கேன்சர் நோயினால் இறந்தார். என் கணவரை வேலைக்கு செல்லவிடாமல் 2 வருடங்களாக வீட்டில் வைத்து தான் அவரை பார்த்தேன் என்றால் சரிதான். நானும் என் மகன்கள் இருவரும் மருமகள்கள், பேரக்குழந்தைகள் அனைவரும் ஒன்றாகத்தான் இருக்கிறோம். எதிரி எங்கள் வீட்டிற்கு வருவது பிடிக்காமல் என்னுடைய கணவரும், என்னுடைய மகன்களும் என்னிடம் ஆட்சேபனை செய்தார்கள் என்றால் சரியல்ல. என் கணவர் உடல்நிலை சரியில்லாமல் 2 வருடங்களாக இருப்பதால் எதிரி என் வீட்டிற்கு வரக்கூடாது போகக்கூடாது என்று தடுத்தார்கள் என்றும் சொன்னால்

சரியல்ல. எனக்கு அடிபட்ட உடன் நான் மயக்கமடையவில்லை. எதிரி என்னுடைய தங்க செயினை பறித்துக்கொண்டு போனார் என்றால் இல்லை. போலிசார் விசாரணையில் என்னுடைய தங்க செயினை எதிரி பறித்துக்கொண்டு சென்றார் என்று சொல்லவில்லை. பறித்துக்கொண்டு போவது என்றால் அறுத்துக்கொண்டு போவது என்று அர்த்தம் என்றால் சரிதான். என்னை மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் இருந்து விடுவிக்கும்போது காவல் துறை ஆய்வாளர் வந்து தான் என்னை விடுவித்தார் என்று சொன்னால் சரிதான். அவ்வாறு ஆய்வாளர் வந்தபோது என்னை என்ன, ஏது என்று விசாரித்து கையெழுத்து வாங்கினார் என்றால் சரிதான். அதற்கு முன்னாலும், பின்னாலும் போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். எனக்கு ஏற்பட்ட காயங்கள் சம்மந்தமாக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் பதிவு செய்யப்பட்டு அதற்குண்டான சிகிச்சையும் எனக்கு வழங்கப்பட்டது என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் எதிரி தண்ணீர் கேட்ட கொஞ்ச நேரத்தில் எதிரி சுத்தியலால் என்னை தலையின் பின்புறம் அடித்தார் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லியிருக்கிறேன். என்னிடமிருந்து எடுக்கப்பட்ட செயின் என்ன வகையான செயின் என்று என்னை போலிசார் விசாரித்தபோது சொல்லவில்லை என்றால் சரிதான். என்னிடம் அ.சா.ஆ.2 புகைப்படங்களில் உள்ள செயினுக்கும் நான் தற்போது கழுத்தில் அணிந்துள்ள தங்க செயினுக்கும் வித்தியாசம் உள்ளது என்று சொன்னால் வித்தியாசம் தெரிகிறது. நான் அணிந்துள்ள தங்க செயினை 1 1/2 வருடத்திற்கு முன்பு என் மகன் ராஜ்கமல் எனக்கு வாங்கிக்கொடுத்தார். நான் எப்போதும் அந்த செயினை கழுத்தில் அணிந்திருக்கிறேன். அந்த செயின் புத்தம்புதிதாக உள்ளது என்றால் சரிதான். என் மகன்கள் பாரதீய ஜனதா கட்சியில் இருக்கிறார்கள் என்று சொன்னால் என்னுடைய மூத்த மகன் உதயசங்கர் மட்டுமே பாரதீய ஜனதா கட்சியில் இருக்கிறார். என் இளைய மகன் ராஜ்கமல் என்பவரும் பாரதீய ஜனதா கட்சியில் இருக்கிறார் என்றால் சரியல்ல. என்னிடமிருந்து எந்த செயினும் காணாமல் போகவில்லை என்றும் இந்த வழக்கிற்கு சொல்ல முடியாத அளவிற்கு எனக்கும் எதிரிக்கும் இடையே தனிப்பட்ட பிரச்சனைகள் இருந்து வந்தது என்றும் அதை சரிகட்டுவதற்காக என் மகன்களுடைய தூண்டுதலின் பேரில் அவர்கள் சார்ந்திருக்கக் கூடிய கட்சியினரை வைத்து இப்படியொரு வழக்கினை பின்னிட்டு தயார் செய்ததில் அவர்களுக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று

சொன்னால் சரியல்ல. தற்போது நான் என்னுடைய 2 மகன்களின் ஆதரவில் தான் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றும் எனக்கு எப்படியோ காயம் ஏற்பட்டதை வைத்து என் மகன்கள் சொல்லிக்கொடுத்ததன்படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C. 156/2022** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | ராஜ்கமல் |
| Father/Husband Name | : | ஜெயச்சந்திரன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.02.2023

(எதிரி 1 ஆஜர்)

முதல் விசாரணை–

நான் தற்போது இராமநாதபுரம் தங்கப்பா நகரில் வசித்து வருகிறேன். நான் இராமநாதபுரம் சன் பேட்டரி கடையில் வேலை பார்த்து வருகிறேன். இந்த வழக்கில் காயம்பட்ட ராஜாத்தி எனது அம்மா ஆவார். சம்பவ சமயத்தில் எனது வீட்டில் என் அம்மா குடியிருந்து வந்தார். உதயசங்கர் எனது உடன் பிறந்த அண்ணன் ஆவார். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 24.04.2021ம் தேதி நான் வேலை பார்க்கும் சன் பேட்டரி கடையில் வேலை பார்த்துவிட்டு மதியம் 01.50 மணிக்கு சாப்பிடுவதற்காக எனது வீட்டிற்கு போனேன். அப்போது என் அம்மா ராஜாத்தி வலதுபக்க தலையில் அடிபட்டு இரத்த வெள்ளத்தில் இருந்தார். நான் உடனே ஒரு ஆட்டோ பிடித்து காயம்பட்ட எனது அம்மா ராஜாத்தியை இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு

சிகிச்சைக்காக அழைத்துச் சென்றேன். அப்போது எனது அம்மா சுயநினைவு திரும்பாததால் மேல்சிகிச்சைக்காக எனது அம்மாவை இராமநாதபுரம் ஜோசப் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு சிகிச்சை முடித்து மேல்சிகிச்சைக்காக மதுரை வேலம்மாள் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். என் அம்மா கண்விழித்த பிறகு என்ன நடந்தது என்று கேட்டபோது ஆஜர் எதிரி எனது அம்மாவை சுத்தியல் வைத்து தலையில் தாக்கியதாகவும் என் அம்மா அணிந்திருந்த 5 பவுன் செயினை பறித்துச் சென்றதாக சொன்னார். சம்பவம் குறித்து இராமநாதபுரம் பஜார் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1. அதில் அறிவேன் சாட்சியாக எனது அண்ணன் உதயசங்கர் கையெழுத்து போட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எங்களுக்கும் ஆஜர் எதிரிக்கும் இடையில் தாவா வழக்கை தவிர வேறு வழக்கு எதுவும் கிடையாது என்றால் சரிதான். நாங்கள் குடியிருக்கும் தங்கப்பா நகரில் உள்ள வீடு கட்டி 30 வருடங்களாகிறது. எங்கள் வீட்டிக்கு அடுத்த வீட்டுக்கு அடுத்த வீடு தான் ஆஜர் எதிரி வீடு என்றால் சரிதான். அந்த வீடு எங்கள் வீடு கட்டுவதற்கு முன்பாகவே இருந்து வருகிறது. ஆஜர் எதிரி 3 வேன்கள் வைத்து பள்ளிக் குழந்தைகளை ஏற்றி இறக்கிவிடும் பணியை செய்து வந்தார் என்றால் சரிதான். அந்த வேன்களை உடைத்தாக சொல்லித்தான் என் அண்ணன் மீது வழக்கு இருக்கிறது என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு 1 மகன், 1 மகள் உள்ளார்கள் என்றால் சரிதான். அந்த மகளுக்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். அவருடைய மருமகன் இராமநாதபுரத்தில் சென்னை மொபைல் என்ற பெயரில் 7 கடைகள் வைத்து தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரியின் மகன் துபாயில் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். நான் சன் பேட்டரி கடையில் வேலை பார்க்கிறேன். என் தந்தையார் லோடுமேனாக இருக்கிறார். என் தந்தையார் மது அருந்துவார் என்றால் சரியல்ல. என் தந்தையார் இந்த சம்பவத்திற்கு 6 முதல் 8 மாதங்களுக்கு முன்பாக நோய்வாய்பட்டு இறந்துபோனார் என்று சொன்னால் சரிதான். என் தந்தையார் கேன்சர் நோயினால் தான் இறந்துபோனார் என்றால் சரிதான். என் தந்தையார் 4, 5 வருடங்களாக நோய்வாய்பட்டு படுத்த படுக்கையாக இருந்தார் என்றால்

சரியல்ல. ஒரு வருடங்களாக நோய்வாய்பட்டு இருந்தார் என்றால் சரிதான். அவர் பணிக்கு எதுவும் செல்லாமல் வீட்டிலேயே இருந்தார் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கு தெற்குத்தரவையில் சொந்தமாக வீடு இருக்கிறது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆஜர் எதிரி குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்கும் இடையே நல்ல பழக்கம் இருந்துவந்தது என்றால் சரிதான். சாதாரணமாக எங்கள் வீட்டிற்கு எதிரி வந்து போவார் என்று சொன்னால் சரியல்ல. அவரது மனைவி வந்து செல்வார். எங்கள் வீட்டிற்கு காம்பவுண்ட் சுவர் கிடையாது. எங்கள் வீட்டிற்கு 4 பக்கமும் காம்பவுண்டுடன் கூடிய வீடும் அந்த காம்பவுண்ட் சுவற்றில் கிழக்கு புறத்தில் கேட் இருக்கிறது என்றால் சரிதான். அந்த கேட் இரும்பினால் ஆன கேட் என்றாலும் அது சுமார் 5 அடி உயரம் உள்ள காம்பவுண்ட் சுவர் என்றால் சரிதான். என் வீட்டின் நான்கு புறங்களிலும் வீடுகள் அடுத்தடுத்து இருக்கிறது என்று சொன்னால் வடக்கு பக்கம் தான் வீடுகள் தான் இருக்கிறது. மற்ற புறம் வீடுகள் எதுவும் இல்லை என்று சொன்னால் வீடுகள் இருக்கிறது. நான் டிப்ளமோ இன் இசிஇ படித்திருக்கிறேன். எங்கள் வீடு கிழக்குப்பக்கம் வாசல் உள்ளது என்றால் சரிதான். காம்பவுண்ட் சுவரை தாண்டித்தான் எங்கள் வீட்டிற்குள் நுழைய வேண்டும் என்றால் சரிதான். எங்கள் வீட்டில் ஒரே ஒரு பெட்ரூம் உள்ளது என்றால் சரிதான். அதன் அளவு தெரியாது. ஒரு ஹால் இருக்கிறது. அதன் அளவும் தெரியாது. என் அண்ணனுக்கு திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். அவருக்கு ஒரு குழந்தை இருக்கிது என்றால் சரிதான். எனது அண்ணன் திருமணமாகி வேறு இடத்தில் தனிக்குடித்தனமாக இருக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா அடிபட்ட உடன் 24.04.2021ம் தேதி மதியம் 02.00 மணிக்கு முதன்முதலாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் வைத்து போலிசாரை பார்த்தேன். போலிசார் உடனடியாக என் அம்மாவை பார்த்தார்கள். என்னையும் பார்த்தார்கள். என்ன நடந்தது என்று கேட்டார்கள் என்றால் நடந்த சம்பவத்தை சொன்னேன். அதை போலிசார் நான் சொல்ல சொல்ல எழுதிக்கொண்டார்கள். அதில் தான் நான் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். அந்த கையெழுத்து தான் அ.சா.ஆ.1ல் உள்ள கையெழுத்து. இதை எழுதிய காவல் துறையை சார்ந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் காவல் நிலையத்திற்கு செல்லவில்லை. நேரடியாக இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். நான் மருத்துவமனைக்கு செல்லும் போது 01.50 முதல் 02.00 மணி இருக்கும். அந்த சமயத்தில் நான் முதலில்

போலிஸ்காரரை தான் பார்த்தேன். மருத்துவரை பார்க்கவில்லை. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் உள்ள மருத்துவரை பிறகு பார்த்தேன். அப்போது நேரம் அதேநேரம் தான். மருத்துவரை பார்த்தபோது நடந்த விசயத்தை கேட்டார்கள். நடந்ததை சொன்னேன். அவர்கள் எழுதிக்கொண்டார்கள். என் தாயாரை மருத்துவர் பார்த்தார். தாயாரின் நிலைமை என்ன என்ற விவரத்தை கேட்டு எழுதிக்கொண்டார்கள் என்றால் சரிதான். அப்போது என் தாயார் நன்றாக பேசிக்கொண்டிருந்தார் என்றால் அவர் சுயநினைவோடு இல்லை. என் அம்மா சுயநினைவோடு தான் இருந்தார் என்றும் அதை தெரிந்தும் நான் வழக்கிற்காக மறைக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் நான் 20 நிமிடங்கள் இருந்தேன். அதற்கு பின்பு நான் என் வீட்டிற்கு வந்துவிட்டேன். வீட்டிற்கு நான் செல்லும்போது போலிசார் அங்கு இருந்தார்கள். வீட்டில் வைத்து இரத்தம்பட்ட இடம், இரத்தம்பட்ட பொருட்கள் ஆகியவற்றை பார்த்து புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். துப்பறியும் நாய் வந்தது என்றும் கைரேகை நிபுணர்கள் வந்தார்கள் என்றால் சரிதான். இந்த விவரங்கள் தெரிந்து ஆர்எஸ்எஸ் மற்றும் இந்து முன்னணியை சேர்ந்தவர்கள் வந்தார்கள் என்றால் இல்லை. ஆர்எஸ்எஸ் மற்றும் இந்து முன்னணியை சேர்ந்தவர்கள் வந்தார்கள் என்றும் நான் அதை மறைக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் 25.04.2021ம் தேதி காலை 11.00 மணி வரை வைத்திருந்தோம். பின்பு இராமநாதபுரம் ஜோசப் மருத்துவமனைக்கு சென்றோம். அங்கு 02.00 மணி நேரம் வைத்திருந்தோம். ஜோசப் மருத்துவமனையில் இருந்த மருத்துவர்கள் என் தாயாரை சோதனை செய்தார்கள் என்றால் சரிதான். அவர்களிடம் என் தாயாருக்கு எவ்வாறு காயம்பட்டது என்றும் காயம்பட்ட பிறகு எங்கு எந்த மருத்துவமனையில் வைத்திருந்தீர்கள் என்று கேட்டார்கள். நாங்கள் சொன்னோம். அதை எழுதிக்கொண்டார்கள். அதற்கு பின்பு மதுரை வேலம்மாள் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு 4 நாட்கள் வைத்திருந்தோம். வேலம்மாள் மருத்துவமனைவில் என் தாயாரிடம் எவ்வாறு காயம்பட்டது என்று கேட்டார்கள். என் தாயார் சொன்னார். அப்போது பஜார் காவல் நிலைய ஆய்வாளர் எங்கள் கூடவே வந்தார் என்றால் சரிதான். வேலம்மாள் மருத்துவமனையிலோ, இராமநாதபுரம் ஜோசப் மருத்துவமனையிலோ போலிசார் என் அம்மாவை விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. வேலம்மாள் மருத்துவமனையில் நான் என் அம்மாவுடன் தான்

இருந்தேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் என் தாயாருடன் நாங்கள் யாரும் குடியிருக்கவில்லை என்றும் நான் என் அண்ணனோடு தனியாக இராமநாதபுரத்தில் இருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என் தாயும், தந்தையும் தங்கப்பா நகரில் குடியிருந்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆஜர் எதிரி எங்கள் வீட்டிற்கு அடிக்கடி வந்து சென்றார் என்றும் அது எனக்கோ எனது அண்ணன் மற்றும் என் தந்தை இறந்து போவதற்கு முன்பாக அவருக்கும் பிடிக்கவில்லை என்றும் அதையும் மீறி எதிரி வந்து சென்றார் என்றாலும் வெளியில் சொல்ல முடியாத அளவிற்கு பிரச்சனை இருந்தது என்றும் அதை தடுப்பதற்கு நாங்கள் எவ்வளவோ முயற்சி செய்தோம் என்றாலும் அந்த முயற்சி தோல்வி அடைந்தது என்றும் என் தாயாருக்கு எங்கோ, எப்படியோ அடிபட்டதை வைத்து நானும், என் குடும்பத்தார்களும் மற்றும் இந்து சமயத்தை சேர்ந்த சிலரை வைத்து இப்படி ஒரு பொய்யான வழக்கை பின்னிட்டு, ஜோடித்துக் கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல.